## தொடர்ந்து 5 ஆண்டுகளாக டிஎன்பிஎல் நிறுவனத்துக்கு சிறந்த ஏற்றுமதியாளர் விருது




கோப்புப்படம்

**சென்னை:** தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (டிஎன்பிஎல்) தனது ஏற்றுமதி திறமைக்கு சான்றாக கடந்த 2017-18, 2018-19, 2019-20 மற்றும் 2021-22 ஆகிய ஆண்டுகளில் சிறந்த ஏற்றுமதியாளர் விருதை ரசாயனங்கள் மற்றும் அது சார்ந்த பொருட்கள் ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில் (கேப்எக்ஸில்) அமைப்பிடமிருந்து பெற்றுள்ளது. மேலும் டிஎன்பிஎல் நிறுவனத்துக்கு 2020-21 காலகட்டத்துக்கான ஏற்றுமதிக்கான சிறப்பு விருதும் கிடைத்தது.

2022-23 நிதியாண்டில் ரூ.5,106.69 கோடி விற்று முதலை எட்டியுள்ளதுடன், ரூ.730.85 கோடி அளவுக்கு அதிபட்ச ஏற்றுமதி வருவாயையும் ஈட்டியுள்ளதன் பின்னணியில் டிஎன்பிஎல் நிறுவனத்துக்கு இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

ஏற்றுமதி வளர்ச்சி சதவீதம் மற்றும் ஏற்றுமதி இடங்களின் எண்ணிக்கை போன்ற முக்கிய குறிகாட்டிகளை உள்ளடக்கிய விருது அளவுகோல், டிஎன்பிஎல்-ன்

பரவலான உலகளாவிய ரீதியிலான தரத்துக்கான அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

மக்களவை தலைவர் ஓம்பிர்லா கடந்த செப்.16-ம் தேதி புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் டிஎன்பிஎல் நிறுவனத்துக்கு மதிப்புக்குரிய இந்த அங்கீகாரத்தை வழங்கினார்.

## அக்.3-ல் எஸ்ஆர்எம் பல்கலை. சிறப்பு பட்டமளிப்பு விழா: விஞ்ஞானி வீரமுத்துவேலுக்கு கவுரவ டாக்டர் பட்டம்

**சென்னை:** எஸ்ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப உயர்கல்வி நிறுவனத்தின் சிறப்பு பட்டமளிப்பு விழா வரும் அக்.3-ம் தேதி நடைபெறவுள்ளது. இதுகுறித்து எஸ்ஆர்எம் பல்கலை. வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நமது தேசிய மருத்துவ ஆணையத்துக்கு உலக மருத்துவக் கல்வி கூட்டமைப்பு அண்மையில் அங்கீகாரம் வழங்கி உள்ளது. இதன் மூலம் 10 ஆண்டுகளுக்கு இந்திய மருத்துவ பட்டதாரிகள் உலகம் முழுவதும் பயிற்சி மேற்கொள்ள முடியும். உலக மருத்துவக் கல்வி கூட்டமைப்பின் தலைவராகப் பேராசிரியர் ரிக்கார்டோ லியோன் பொற்கொஸ் பொறுப்பு வகிக்கிறார்.

இவர் அக்.3-ம் தேதி நடைபெறவுள்ள எஸ்ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப உயர்கல்வி நிறுவனத்தின் சிறப்பு பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று பட்டமளிப்பு உரை நிகழ்த்துகிறார்.

நிகழ்ச்சியில் ஆயுர்வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி மருத்துவத்தைப் பிரபலப்படுத்தும் ஆயுஷ் அமைச்சகத்தின் செயலாளர் பத்மஸ்ரீ விருது பெற்ற வைத்தியா ராஜேஷ் கோட்சா, சந்திரயான்-3 செயற்கைக்கோளை நிலவுக்கு அனுப்பும் திட்டத்தின்

இயக்குநர் மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானி பி.வீரமுத்துவேல் ஆகியோருக்கு கவுரவ டாக்டர் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## ரூ.71 கோடியில் மீன் இறங்கு தளங்கள், விடுதி கட்டிடங்கள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்




**சென்னை:** மீன்வளத்துறை சார்பில் ரூ.71.60 கோடியில் அமைக்கப்பட்டுள்ள புதிய, மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள், மின் விதைப் பண்ணை மற்றும் மாணவ, மாணவியர் விடுதிக் கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: கன்னியாகுமரி மாவட்டம் குறும்பனையில் ரூ.30 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம், தஞ்சாவூர் மாவட்டம் கீழத்தோட்டம் கிராமத்தில் ரூ.8 கோடியில் அமைக்கப்பட்டுள்ள புதிய மீன் இறங்கு தளம், சேதுபாவாசத்திரம் மீனவ கிராமத்தில் ரூ.10 கோடியில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளம் ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொலி வாயிலாக நேற்று திறந்துவைத்தார்.

அதேபோல, கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூரில் ரூ.4.50 கோடி செலவில் மரபணு ரீதியாக மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் விதைப் பண்ணை, புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் கிராமத்தில் ரூ.3.05 கோடியிலும், புதுக்குடி கிராமத்தில் ரூ.1.40 கோடியிலும் புதிய மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள் என மொத்தம் ரூ. 56.95 கோடியில் அமைக்கப்பட்டுள்ள புதிய, மேம்படுத்தப்பட்ட மீன்இறங்கு தளங்கள், விதைப்பண்ணை ஆகியவற்றை முதல்வர் திறந்து வைத்தார்.

**மீன்வளப் பொறியியல் கல்லூரி:** மேலும், ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்பட்டு வரும் நாகப்பட்டினம் மீன்வளப் பொறியியல் கல்லூரியில் தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கியின்நிதி உதவியுடன் தலா ரூ.7.30 கோடியில் 33 தங்கும் அறைகளுடன் சுமார் 110 மாணவர்கள், 110 மாணவிகள் தங்கும் வகையில் கட்டப்பட்டுள்ள விடுதி கட்டிடங்களையும் முதல்வர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவர் ந.கவுதமன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, துறையின் செயலர்மங்கத்ராம் சர்மா, மீன்வளத்துறை ஆணையர் கே.சு.பழனிசாமி, மீன்வள பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) என்.பெலிக்ஸ் ஆகியோர் பங்கேற்றனர். இவ்வாறு தமிழக அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரூ.1 கோடியில் சுழல் நிதி உருவாக்கம்:** மீன்வளத் துறை செயலர் மங்கத்ராம் சர்மா வெளியிட்ட செய்திக்குறிப்பு: எதிர்பாராமல் கடலில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலை மற்றும் இயற்கை சீற்றங்களின் காரணமாக விபத்தில் சிக்கி காணாமல் போன மீனவர்களின் குடும்பங்கள் எந்த வருமானமும் இன்றி வறுமைக்கோட்டுக்கு கீழ் செல்லும் நிலையில் உள்ளன. அவர்களின் துயர் துடைக்க சுழல் நிதியை தமிழக அரசு உருவாக்கியுள்ளது.

அந்த நிதியில் இருந்து காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கு ரூ.2 லட்சம் வழங்கப்படுகிறது. இந்த நிதியின் மூலம் அவர்கள் தங்களை பொருளாதாரரீதியாக மேம்படுத்திக் கொள்ள பேருதவியாக அமையும்.

அந்த வகையில், கடந்த 2016 முதல் 2021-ம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள 25 மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சம் வீதம் நிவாரணம் வழங்க ரூ.50 லட்சமும் இனிவரும் காலங்களில் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்க ரூ.50 லட்சம் என மொத்தம் ரூ.1 கோடியை கொண்டு சுழல் நிதி உருவாக்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

## வாச்சாத்தி வன்கொடுமை வழக்கில் மேல்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி: 200-க்கும் மேற்பட்டோரின் சிறை தண்டனை உறுதி




**சென்னை:** வாச்சாத்தி பாலியல் வன்கொடுமை வழக்கில், பாதிக்கப்பட்ட 18 பழங்குடியின பெண்களுக்கும் அரசு வேலையுடன் தலா ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்குமாறு தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வனத் துறை, காவல் துறை, வருவாய் துறையை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட அரசு

ஊழியர்களுக்கு விதிக்கப்பட்ட சிறை தண்டனையையும் நீதிமன்றம் உறுதிசெய்து உத்தரவிட்டுள்ளது.

தருமபுரி மாவட்டம் அரூர் - பாப்பிரெட்டிபட்டி இடையே கல்வராயன் மலைத்தொடரின் அடிவாரப் பகுதியில் உள்ள வாச்சாத்தி மலை கிராமத்தினர் சந்தனமரக் கடத்தலில் ஈடுபட்டதாக கடந்த 1992 ஜூன் 20-ம் தேதி 155 வனத் துறையினர், 108 காவல் துறையினர், 6 வருவாய் துறையினர் கூட்டாக சோதனை நடத்தினர்.

அப்போது, வீடுகளுக்குள் புகுந்து பொருட்களை சூறையாடினர். 90 பெண்கள் உட்பட 133 பேரை கைது செய்து, ஊர் நடுவே இருந்த ஆலமரத்தடிக்கு அழைத்து வந்துள்ளனர். அன்று மாலை, ஏரிக்கரையில் மறைத்து வைத்துள்ள சந்தனமரக் கட்டைகளை எடுத்து தருமாறு கூறி, 18 இளம்பெண்களை மட்டும் தனியாக அழைத்துச் சென்று, வனத் துறையினரும், காவல் துறையினரும் ஏரிக்கரையில் பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. ஆனால், வன்கொடுமை தொடர்பாக போலீஸார் எந்த வழக்கும் பதிவு செய்யவில்லை.

அப்போது தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்த சண்முகம், அரூர் முன்னாள் எம்எல்ஏ அண்ணாமலை, தேசிய பழங்குடியின, பட்டியலின மக்கள் நல ஆணையம், மகளிர் அமைப்பினர் எடுத்த முயற்சிகளின் பலனாக, இச்சம்பவம் குறித்து சிபிஐ விசாரணைக்கு சென்னை உயர் நீதிமன்றம் கடந்த 1993-ல் உத்தரவிட்டது. சிபிஐ 2 ஆண்டுகள் விசாரணை நடத்தி, 1995-ல் வழக்குபதிவு செய்தது. குற்றத்தில் ஈடுபட்டதாக 155 வனத் துறையினர், 108 காவல்துறையினர், 6 வருவாய் துறையினர் என 269 பேரை கைது செய்தது.

பின்னர், இந்த வழக்கை விசாரித்த தருமபுரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி குமரகுரு கடந்த 2011 செப்.29-ம் தேதி, இச்சம்பவத்தில் ஈடுபட்டு அப்போது

உயிருடன் இருந்த215 பேர் குற்றவாளிகள் என்று தீர்ப்பு அளித்தார். இதில் 12 பேருக்கு 10 ஆண்டுகளும், 5 பேருக்கு 7 ஆண்டுகளும், மற்றவர்களுக்கு 1 முதல் 3 ஆண்டுகள் வரையும் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த தண்டனையை எதிர்த்து, குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பி.வேல்முருகன், 12 ஆண்டுகள் கழித்து, அதேநாளான (செப்.29) நேற்று தீர்ப்பு அளித்தார். தீர்ப்பில் கூறியிருப்பதாவது:

**ஈவு இரக்கம் இல்லாதவர்கள்:** மொத்தம் 18 பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுள்ளனர். 13 வயது சிறுமி, 8 மாத கர்ப்பிணியைக்கூட விட்டுவைக்காமல், குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஈவு இரக்கமோ, மனிதாபிமானமோ இல்லாமல் அரக்கத்தனத்துடன் செயல்பட்டுள்ளனர்.

சந்தனமரக் கடத்தலில் ஈடுபட்டவர்களை அரசுப் பணி நிமித்தமாகவே கைது செய்ததாகவும், அதற்கு பழிவாங்கும் விதமாகவே பொய்யான பாலியல் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. அப்பாவி இளம்பெண்களை வன்கொடுமை செய்வது அரசுப் பணி கிடையாது. சந்தனமரக் கடத்தலில் ஈடுபடும் பெரும் புள்ளிகளை காப்பாற்றும் நோக்கில் வனத் துறை, காவல் துறையினர் ஒட்டுமொத்த கிராமத்தையும் பலிகடா ஆக்கியுள்ளனர். 5 நாட்களாக சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண்களை மறுநாள் நள்ளிரவு 12 மணிக்கு ரிமாண்ட் செய்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து ஒரு மாதம் கழித்தே வெளியே தெரியவந்துள்ளது. 3 ஆண்டுகளுக்கு பிறகே அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு பிறகே நீதிமன்ற விசாரணை

தொடங்கியுள்ளது. சீருடை அணிந்த அரசு ஊழியர்கள்தான் குற்றம் செய்துள்ளனர் என்பதை சிபிஐ உறுதி செய்துள்ளது.

குற்றத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்பது மாவட்ட அதிகாரிகளுக்கு நன்கு தெரியும். தவிர, பாதிக்கப்பட்ட வாச்சாத்தி பெண்களுக்கு பாதுகாப்பாக நிற்காமல், குற்றம் சாட்டப்பட்ட அரசு ஊழியர்களை காப்பாற்றும் நோக்கிலேயே அப்போதைய அரசும் செயல்பட்டது கண்டனத்துக்குரியது, துரதிர்ஷ்டவசமானது. இந்த வழக்கில் கீழமை நீதிமன்றம் சரியான தீர்ப்பைதான் அளித்துள்ளது என்பதால் மேல்முறையீட்டு மனுக்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்படுகின்றன. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நானும் உறுதி செய்கிறேன்.

பண உதவியும், நிரந்தர அரசு வேலையும்தான் இந்த வேதனைக்கு தீர்வாக இருக்க முடியும். எனவே, பாதிக்கப்பட்ட 18 பெண்களுக்கும் அரசுவேலையுடன் தலா ரூ.10 லட்சத்தை தமிழக அரசு நிவாரணமாக வழங்க வேண்டும். வாச்சாத்தி கிராமத்தினரின் மறுவாழ்வுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து அரசு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

குற்றத்தை மூடி மறைத்த அப்போதைய தருமபுரி ஆட்சியர், எஸ்.பி.,மாவட்ட வனத் துறை அதிகாரி மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தண்டனை அனுபவிக்க வேண்டியவர்களை சிறையில் அடைக்க கீழமை நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஒப்புதல் அளித்தார் - மகளிர் இடஒதுக்கீடு மசோதா சட்டமானது



**புதுடெல்லி**: வரலாற்று சிறப்புமிக்க மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

மக்களவை மற்றும் சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடங்களை ஒதுக்க வகை செய்யும் மகளிர் இடஒதுக்கீடு மசோதா, புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் முதல் மசோதாவாக இம்மாதம் நிறைவேற்றப்பட்டது.

மக்களவையில் இம்மசோதா கடந்த 19-ம் தேதியும் மாநிலங்களவையில் 21-ம் தேதியும் நிறைவேற்றப்பட்டது. மக்களவையில் இதற்கு ஆதரவாக 454 உறுப்பினர்கள் வாக்களித்தனர். ஏஐஎம்ஐஎம் கட்சியின் 2 எம்.பி.க்கள் மட்டுமே எதிராக வாக்களித்தனர். முஸ்லிம் பெண்கள் மற்றும் ஓபிசி பெண்களுக்கு

உள்ஒதுக்கீடு வழங்கப்படவில்லை என்று அக்கட்சி காரணம் கூறியது. காங்கிரஸ் கட்சியும் ஓபிசி பெண்களுக்கு உள்ஒதுக்கீட்டை வலியுறுத்தியது.

புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகுதி மறுவரையறைக்கு பிறகே மகளிர் இடஒதுக்கீடு நடைமுறைக்கு வரும் என்ற நிலையில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் 2024 மக்களவைத் தேர்தலிலேயே இதனை அமல்படுத்த வலியுறுத்தினர்.

இதையடுத்து இம்மசோதா மாநிலங்களவையில் விவாதிக்கப்பட்டு, கடந்த 21-ம் தேதி ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. 215 உறுப்பினர்கள் மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இம்மசோதா நிறைவேறியதை தொடர்ந்து குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நேற்று ஒப்புதல் அளித்தார். இதையடுத்து இந்த மசோதா சட்டமாக மாறியது. இதனை மத்திய அரசு தனது அரசிதழில் அறிவிக்கையாக வெளியிட்டுள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகுதி மறுவரையறைக்கு குறைந்தபட்சம் 6 ஆண்டுகள் ஆகும் என்பதால் 2029 தேர்தலில் மகளிர் இடஒதுக்கீடு நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 1996-ம் ஆண்டு அப்போதைய பிரதமர் தேவகவுடா ஆட்சியில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் நிறைவேற்றப்படவில்லை.

1998-ல் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் இம்மசோதா மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டது. அப்போதும் போதிய ஆதரவு இல்லாததால் மசோதா காலாவதியானது. 1999, 2002, 2003-ம் ஆண்டுகளில் மசோதா தாக்கல் செய்யப்பட்டு

நிறைவேறாமல் போனது. 2010-ல் இம்மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் மக்களவையில் நிறைவேற்ற முடியவில்லை. சுமார் 27 ஆண்டுகளுக்குப் பிறகு பிரதமர் மோடி தலைமையிலான ஆட்சியில் மசோதா நிறைவேற்றப்பட்டு உள்ளது

## Asian Games 2023 | இந்தியா 8 தங்கம் உள்ளிட்ட 33 பதக்கங்களுடன் 4-ம் இடத்தில் நீடிப்பு!




தடகள வீராங்கனை கிரண்

**ஹாங்சோ:** ஆசிய விளையாட்டு போட்டியில் இந்தியா இன்று (வெள்ளிக்கிழமை) துப்பாக்கிச் சுடுதல், டென்னிஸ், ஸ்குவாஷ், தடகளம் ஆகியவற்றில் பதக்கம் வென்றுள்ளது. அதேநேரத்தில் சில முக்கியப் போட்டிகளில் இறுதி, காலிறுதி மற்றும் அரையிறுதிக்கு இந்திய வீரர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

19-வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்று வருகிறது. இதில் துப்பாக்கி சுடுதலில் 6 தங்கமும், மகளிர் கிரிக்கெட் மற்றும் குதிரையேற்றத்தில் தலா 1 தங்கம் என 8 தங்கப் பதக்கங்களை இந்தியா

வென்றுள்ளது. மொத்தமாக 8 தங்கம், 12 வெள்ளி மற்றும் 13 வெண்கலத்துடன் 33 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் 4-வது இடத்தில் உள்ளது.

- **ஆடவர் 50 மீட்டர் ரைபிள் 3 பொசிஷன் குழு:** இந்த பிரிவில் 1769 புள்ளிகளை பெற்று புதிய உலக சாதனை படைத்துள்ளது ஐஸ்வர் பிரதாப் சிங் தோமர், ஸ்வப்னில் மற்றும் அகில் ஷியோரன் ஆகியோர் அடங்கிய இந்திய குழு.
- **மகளிர் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் குழு:** 1731 புள்ளிகளுடன் இந்தப் பிரிவில் வெள்ளி வென்றுள்ளது இந்தியா. ஈஷா சிங், பாலக் மற்றும் திவ்யா ஆகியோர் இதில் இந்தியா சார்பில் பங்கேற்றிருந்தனர்.
- **மகளிர் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் தனிநபர்:** இந்த பிரிவில் இந்தியாவின் பாலக் தங்கமும், ஈஷா சிங் வெள்ளியும் வென்றனர்.
- **டென்னிஸ்:** ஆடவர் இரட்டையர் இறுதிப் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் மற்றும் சாகேத் ஆகியோர் வெள்ளிப்பதக்கம் பெற்றனர். கலப்பு இரட்டையர் பிரிவில் போபண்ணா-போசலே ஜோடி இறுதிப்போட்டிக்கு முன்னேறி உள்ளது.
- **ஸ்குவாஷ்:** இந்திய மகளிர் அணி வெண்கலம் வென்றது. ஆடவர் அணி மலேசியாவை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியுள்ளது.
- **ஆடவர் 50 மீட்டர் ரைபிள் 3 பொசிஷன் தனிநபர்:** ஐஸ்வர் பிரதாப் சிங் தோமர் வெள்ளி வென்றார்.
- மகளிர் குண்டு எறிதல்: இந்தியாவின் கிரண் வெண்கலம் வென்றார்.
- **குத்துச்சண்டை:** மகளிர் 45-50 கிலோ எடைப்பிரிவில் நிகத் ஜரீன் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.
- **சதுரங்கம்:** இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணியினர் ரவுண்ட் 1-ல் வெற்றி.
- **மகளிர் ஹாக்கி:** குரூப்-ஏ போட்டியில் இந்தியா 6-0 என்ற கணக்கில் மலேசியாவை வென்றது.
- **தடகளம்:** 400 மீட்டர் ஹீட்ஸ் - அஜ்மல் இறுதிக்கு தகுதி.
- **பாட்மிண்டன்:** இந்திய ஆடவர் அணி அரையிறுதிக்கு தகுதி.
- **டேபிள் டென்னிஸ்:** மணிகா பாத்ரா, மனவ் தாக்கர், மனுஷ் ஷா காலிறுதிக்கு தகுதி. மகளிர் இரட்டையர் பிரிவிலும் இந்தியா தகுதி.
- **நீச்சல்:** அத்வைத், 200 மீட்டர் பேக்ஸ்ட்ரோக் இறுதிக்கு தகுதி. ஸஜன் பிரகாஷ், 200 மீட்டர் பட்டர்பிளை இறுதிக்கு தகுதி.
- சீனா, ஜப்பான் மற்றும் கொரியா ஆகிய நாடுகள் பதக்கப்பட்டியலில் முதல் மூன்று இடங்களில் உள்ளன.